**செய்தி வெளியீடு எண்: 129** **நாள் : 28.03.2015**

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 6.**
**செய்தி வெளியீடு**

1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக தமிழை கற்றுக் கொள்ளும் வகையில் "2006ம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம்" ( தமிழ்நாடு சட்டம் எண்.13/2006) பிரிவு 2 (e) (iv) ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட அனைத்து பள்ளிகளிலும் 2015–2016 ஆம் கல்வியாண்டிலிருந்து 1ஆம் வகுப்பில் தொடங்கி படிப்படியாக தமிழ் கற்பிக்கப்படுதல் வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ள்து.

அதன்படி 2015–2016 ஆம் கல்வியாண்டில் பல்வேறு வாரியங்களை சார்ந்த அனைத்து பள்ளிகளும் கட்டாயமாக தமிழ் மொழி பாடம் கற்றலை 1 ஆம் வகுப்பில் நடைமுறைப்படுத்தவேண்டும்.

எனவே, 1ம் வகுப்பு தமிழ் பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சென்னை மற்றும் மதுரை வட்டார அலுவலகத்தில் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் சென்னை வட்டார அலுவலகத்திலும், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மதுரை வட்டார அலுவலகத்திலும் பாடநூல்களை பெற்றுக்கொள்ளலாம். 1–ம் வகுப்பு தமிழ் பாடநூலின் விலை ரூ.60/– ஆகும். வட்டார அலுவலகங்களின் முகவரி பின்வருமாறு –

**வட்டார அலுவலகங்களின் முகவரி –**

**மதுரை**
வட்டார அலுவலர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
பாண்டியன் சூப்பர் மார்க்கெட், செந்தாமரை கிடங்கு,
முடக்கு சாலை, தேனி ரோடு, மதுரை –625 010.
தொலைப்பேசி – 0452–2381484, செல் – 9894057786

**சென்னை**
வட்டார அலுவலர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
வேளச்சேரி மெயின் ரோடு, எஸ்.ஆர்.பி.டூல்ஸ் அருகில்,
திருவான்மியூர், சென்னை – 600 041.
தொலைப்பேசி – 044–22541326, செல் – 9962478471 / 9566116271

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**